# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் 108/மா/2022**

**நாள் : 27.8.2022**

திரு. T.R. ஸ்ரீநிவாசன்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 14,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோகர் நகர், ஜாபர்கான்பேட்டை, பிள்ளையார் கோவில் தெரு, எண்.108/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவரது 17.07.2022 நாளிட்ட மனு 25.07.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 108/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, அசோகர் நகர், ஜாபர்கான்பேட்டை, பிள்ளையார் கோவில் தெரு, எண்.108/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவரின் முறையீட்டு மனுவில்,

“சென்னை - 600 091, மடிப்பாக்கம், குபேரன் நகர் விரிவு 2வது தெரு, மனை எண்.58 & 59ல் இடிந்து விழும் நிலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பினை இடித்திட நடவடிக்கை எடுக்கக் கோரி 20.09.2021ல் அரசு முதன்மை செயலர், வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறையில் அளித்த எனது மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்து அதன் விபரத்தினை அரசுக்கு அனுப்பிட அறிவுறுத்தி அரசு கடிதம் எண்.16070/நவ. 7 (2) / 2021 – 1 நாள் 20.10.2021ன்படி – 1. உறுப்பினர் செயலர், CMDA சென்னை – 600 008. 2. ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,

சென்னை – 600 003. 3. மண்டல அலுவலர் / உதவி ஆணையர், மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 091 ஆகிய உயர் அதிகாரிகளுக்கு அரசு கூடுதல் செயலர், தொழில் நுட்பம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனை தொடர்ந்து செயற் பொறியாளர் - மண்டலம் 14 அவர்கள் ம.அ.14 க.எண்./ சிறப்பு/2021/ நாள்: 29.12.2021 நாளிட்ட கடிதத்தினை அடுக்குமாடி குடியிருப்பின் உரிமையாளர்களுக்கு அனுப்பி உள்ளார். அதில் கட்டடத்திற்கு "உறுதித்தன்மை சான்று" (Stability Certificate) அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து பெற்று, இக்கடிதம் கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் வழங்கிடுமாறும் தவறும்பட்சம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அக்கடிதத்தில் செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

உறுப்பினர் செயலர், CMDA எழும்பூர், சென்னை – 600 008 அவர்கள் 07.02.2022ல் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003, மண்டல செயற்பொறியாளர் - மண்டலம் 14, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 091 ஆகியோருக்கு அனுப்பி உள்ள கடிதத்தில்,

The Said Building Exercising the Powers as per the CCMC Act, 1919-ன்படி மனை எண்.58 & 59, குபேரன் நகர் 2வது தெரு, மடிப்பாக்கம் - 600 091, கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து அதன் விபரத்தினை அரசுக்கும், மனுதாரருக்கும் நேரிடையாக தெரிவிக்குமாறும் மாநகராட்சி உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

செயற்பொறியாளர் - மண்டலம் 14 அவர்கள் ம.அ.14.க.எண். 002667/2022/நாள்:04.05.2022 நாளிட்ட கடிதத்தினை அடுக்குமாடி குடியிருப்பின் உரிமையாளர்களுக்கு அனுப்பி உள்ளார். அக்கடிதத்தில் 29.12.2021ன் கடிதத்தில் கட்டிடத்தின் உறுதித்தன்மை சான்றிதழினை செயற்பொறியாளர் கோரியதை இதுநாள் வரை கட்டட உரிமையாளர்கள் சமர்ப்பிக்கப்படாததால், மேற்கண்ட கட்டடத்தின் நான்கு உரிமையாளர்களும் சேர்ந்து கட்டடத்தினை இடித்திட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கட்டட இடிப்பு அனுமதிக்கு விண்ணப்பித்து கட்டடத்தினை இடித்திடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் வருகின்ற மழைக்காலங்களில் கட்டடம் இடிந்து, சாலையில் செல்லும் பொதுமக்கள் மீதோ அல்லது கட்டடத்தின் அருகில் உள்ள குடியிருப்புகள் மீதோ விழுந்து விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்ந்தால் கட்டடத்தின் உரிமையாளர் முழு பொறுப்பாவீர்கள் என்பதையும் தெரிவித்தும், அவ்வாறு ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழ்ந்தால் மாநகராட்சி உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் 04.05.2022ன் செயற்பொறியாளரின் கடிதம் சார்ந்து உரிய பதிலினை 10 தினங்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் மண்டலம் -14-ன் செயற் பொறியாளர் கட்டடத்தின் உரிமையாளர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

04.05.2022ன் செயற்பொறியாளர் கடிதம் சார்ந்து, கட்டிடத்தின் மேற்கு பக்கம் உள்ள இரு குடியிருப்பின் உரிமையாளர்கள் திரு. சந்திரேஸ்வரன், திரு. ரா. ஸ்ரீநிவாசன் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இடித்திட தயாராக உள்ளோம் என்பதை தெரிவித்து செயற்பொறியாளரிடம் கடிதம் வழங்கினோம்; கிழக்கு பக்கம் உள்ள இரு குடியிருப்பின் உரிமையாளர்கள் திருமதி. சுப்பிரியா & ரகு ஆகிய இருவரும் கட்டடம் இடிப்பது குறித்தும், கட்டட உறுதித்தன்மை சான்றும் வழங்கவில்லை.

CCMC Act 1919 Building Regulations Building Rules Section 246A Demolition of Building (1) If any person intends to demolish a building either in whole or in part, he shall send an application to the Commissioner in writing for permission to executed the work. விதிகளின்படி மேற்கு பக்கம் உள்ள தரை தளம் மற்றும் முதல் தளம் எங்கள் இரு குடியிருப்புக்கு கட்டட இடிப்பு வரைபடம் சமர்ப்பிக்க தயாராக உள்ளோம். அதற்கு மண்டலம்-14ன் செயற் பொறியாளர் அனுமதி வழங்கிடுமாறும் மனுதாரரால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இது குறித்து மண்டலம் -14 பெருநகர சென்னை மாநகராட்சி செயற்பொறியாளர் மனுதாரருக்கு எவ்வித பதிலும் வழங்கவில்லை. இதர இரு குடியிருப்புகளின் உரிமையாளர்கள் திருமதி. சுப்பிரியா & ரகு ஆகியோருக்கு CCMC Act 1919-ன்படி கட்டிடம் இடிப்பு நோட்டீசும் அளிக்கவில்லை. குடியிருப்பு சார்ந்து கட்டிட இடிப்பு நோட்டீஸ் அளிக்கவில்லை. 20.10.2021ன் அரசு கடிதம், 07.02.2022ன் உறுப்பினர் செயலர் CMDA ஆகியோரின் கடித அறிவுறுத்தலின்படியும், சென்னை – 600 091, மடிப்பாக்கம், குபேரன் நகர் விரிவு 2வது தெரு மனை எண்.58 & 59-ல் உள்ள கட்டடத்தின் மீது (1) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை – 3. (2) தலைமை பொறியாளர் பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை – 3, மண்டலம் - 14, மண்டல அலுவலர் / உதவி ஆணையர், மண்டலம் - 14 செயற் பொறியாளர் மற்றும் கோட்டம் 188, உதவி பொறியாளர் ஆகிய அதிகாரிகள் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்காமல் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் காலதாமதம் செய்து வருகின்றனர். அரசு கடித அறிவுறுத்தலின்படி அரசுக்கும் மனுதாரருக்கும் எவ்வித பதிலும் வழங்கவில்லை. எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் உரிய தீர்வு வேண்டி இம்மனுவினை பணிந்து தாக்கல் செய்கிறேன். எனது மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து, விசாரணைக்கு ஏற்று எதிர்தரப்பினரை விசாரணை செய்து மனுதாரருக்கு உரிய நீதியை வழங்கிடுமாறும் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 16.08.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 16.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

> "சென்னை மடிப்பாக்கம் குபேரன் நகர் விரிவு 2வது தெரு, மனை எண் 58 மற்றும் 59ல் அமைந்துள்ள எனக்கும் மற்றும் சுப்ரியா உட்பட 3 பேருக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. கடந்த 1996ம் ஆண்டில் கட்டப்பட்ட அக்குடியிருப்பு இடிந்து விழும் நிலையில் உள்ளதால், மேற்கண்ட கட்டடத்தை இடித்திடுமாறு (demolition) பெருநகர சென்னை மாநகராட்சியிடம் கடிதம் அளித்துள்ளேன். இதே போன்று எனது மேல் வீட்டில் உள்ள மற்றொரு உரிமையாளர் திரு சந்திரேஸ்வரனும் மேற்கண்ட கட்டடத்தை இடித்திட சம்மதம் தெரிவித்து மாநகராட்சியில் கடிதம் அளித்துள்ளார். எனது கடிதத்தை பரிசீலித்த மாநகராட்சி அலுவலர்கள், எங்களையே அக்கட்டடத்திற்கான உறுதித்தன்மை சான்றை (Stability Certificate) அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்குமாறு கோரியுள்ளனர். கட்டட உறுதித்தன்மை சான்றை மாநகராட்சி அலுவலர்கள்தான் பெறவேண்டும். ஆனால் எங்களை வாங்கி, மாநகராட்சிக்கு அளிக்கும்படி கட்டாயப்படுத்தி, எங்களை அலைக்கழிக்கின்றனர். மாநகராட்சியின் அலட்சியப்போக்கால் மேற்கண்ட கட்டடம் இடிந்துவிழும் அபாயம் உள்ளது.

எனவே, மேற்கண்ட பழுதடைந்த இடிந்துவிழும் நிலையில் உள்ள கட்டடத்தை இடித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது 19.7.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக திரு. சந்திரேஸ்வரன், திருமதி சுப்ரியா & ரகு ஆகியோர் மண்டலம் 14ன் செயற்பொறியாளரிடம் அளித்துள்ள கடிதங்களின் நகல் மற்றும் புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் ஆகியோர் 16.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை மடிப்பாக்கம் குபேரன் நகர் விரிவு 2வது தெரு, மனை எண் 58 மற்றும் 59ல் அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. கடந்த 1996 – 97ம் ஆண்டில் கட்டப்பட்ட அக்குடியிருப்பு இடிந்து விழும் நிலையில் உள்ளது எனவும், அதனை இடித்திடவும் மாநகராட்சியை கேட்டுக்கொண்டுள்ளார். மேற்கண்ட பிரிவுபடாத மனையில் (Undivided share) அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு பகுதியின் கீழ்தளத்தில் மனுதாரரும், மேல் தளத்தில் மற்றொருவரும் உள்ளனர். அதே போன்று அதன் பக்கத்தில் திருமதி சுப்ரியா என்பவருக்கு சொந்தமான கட்டடப் பகுதி அமைந்துள்ளது. மனுதாரர் தனது மனுவில் மேற்கண்ட கட்டடத்தை இடித்திடுமாறு மாநகராட்சியில் கேட்டுக்கொண்டபோது அவர் Demolition Letter கொடுக்கவில்லை. மேலும், அவரது பக்கத்து போர்ஷனில் உள்ள உரிமையாளரிடமிருந்து NOC ஏதும் பெற்றுத் தரவில்லை. மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பில் உள்ளோரிடையே உள்ள பிரச்சனையின் காரணமாக மேற்கண்ட கட்டடத்தை இடித்திட மாநகராட்சியில் மனுதாரர் கடிதம் அளித்துள்ளார். மேற்கண்ட கட்டடத்தை மாநகராட்சிப் பொறியாளர்களால் ஆய்வு செய்தபோது மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பு உடனே இடிந்துவிடும் நிலையில் இல்லை என கண்டறியப்பட்டுள்ளதை இம்முறை மன்றத்தில், செயற்பொறியாளரான எனது 16.8.2022 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வின்போது எடுக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பின் புகைப்படங்களின் நகல்கள் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

எனினும், மேற்கண்ட மனுதாரர் உரிய விவரங்களுடனும், உரிய கட்டணத்துடன் Demolition Planning permission கேட்டு விண்ணப்பம்; மற்றும் மற்றொரு பகுதியில் வசிக்கும் சுப்ரியா என்கின்ற உரிமையாளரிடம் NOC பெற்று அளிக்கும்பட்சத்தில், அவரது விண்ணப்பம் மாநகராட்சியால் பரிசீலிக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். பொதுவாக கட்டடத்திற்கான உறுதித்தன்மை சான்றை (Stability Certificate) பொதுப்பணித் துறையால் அளிக்கப்படும். மேலும் பொதுப் பணித்துறையிலிருந்து Stability Certificate பெற விரைவில் கடிதம் அனுப்பி, இன்னும் 15 நாட்களில் Stability Certificate பெறப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். அதே போன்று மேற்கண்ட கட்டடத்தையொட்டியுள்ள அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளரான திருமதி சுப்ரியா என்பவரிடமும் பொதுப் பணித்துறையிலிருந்து அவர்களுக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புக்கு Stability Certificate பெற்றுத் தருமாறு மாநகராட்சியால் பணிக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் செயற்பொறியாளரான எனது 16.8.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்” எனத் தெரிவித்துள்ளனர்.

மனுதாரது மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14ன் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து பின்வருவன இம்முறைமன்றத்தால் கண்டறியப்பட்டன:

சென்னை மடிப்பாக்கம் குபேரன் நகர் விரிவு 2வது தெரு, மனை எண் 58 மற்றும் 59ல் அமைந்துள்ள மனுதாரர் மற்றும் சுப்ரியா உட்பட 3 பேருக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பு உள்ளதும். கடந்த 1996ம் ஆண்டில் கட்டப்பட்ட அக்குடியிருப்பு இடிந்து விழும் நிலையில் உள்ளதால், மேற்கண்ட கட்டடத்தை இடித்திடுமாறு (demolition) பெருநகர சென்னை மாநகராட்சியிடம் கடிதம் அளித்துள்ளதும், அதற்கு மனுதாரரது மேல் வீட்டில் உள்ள மற்றொரு உரிமையாளர் திரு. சந்திரேஸ்வரனும் மேற்கண்ட கட்டடத்தை இடித்திட சம்மதம் தெரிவித்து மாநகராட்சியில் கடிதம் அளித்துள்ளதும் தெரியவருகிறது. மனுதாரரது கடிதத்தை பரிசீலித்த மாநகராட்சி அலுவலர்கள், அவர்களையே அக்கட்டடத்திற்கான உறுதித்தன்மை சான்றை (Stability Certificate) அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்குமாறு கோரியுள்ளதும் தெரியவருகிறது. கட்டட உறுதித்தன்மை சான்றை மாநகராட்சி அலுவலர்கள்தான் பெறவேண்டும் என்பதும், ஆனால் மனுதாரரை உறுதித்தன்மை சான்றை வாங்கி மாநகராட்சிக்கு அளிக்கும்படி கட்டாயப்படுத்தி, அலைக்கழிப்பதால், மாநகராட்சியின் அலட்சியப்போக்கால் மேற்கண்ட கட்டடம் இடிந்துவிழும் அபாயம் உள்ளது என்பதை மனுதாரரது மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மேற்கண்ட பிரிவுபடாத மனையில் (Undivided share) அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு பகுதியின் கீழ்தளத்தில் மனுதாரரும், மேல் தளத்தில் மற்றொருவரும் உள்ளதும், அதே போன்று அதன் பக்கத்தில் திருமதி சுப்ரியா என்பவருக்கு சொந்தமான கட்டடப் பகுதி அமைந்துள்ளதும், மனுதாரர் தனது மனுவில் மேற்கண்ட கட்டடத்தை இடித்திடுமாறு மாநகராட்சியில் கேட்டுக்கொண்டபோது அவர் Demolition Letter கொடுக்கவில்லை என்பதும் மேலும், அவரது பக்கத்து போர்ஷனில் உள்ள உரிமையாளரிடமிருந்து NOC ஏதும் பெற்றுத் தரவில்லை என்பதும் மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பில் உள்ளோரிடையே உள்ள பிரச்சனையின் காரணமாக மேற்கண்ட கட்டடத்தை இடித்திட மாநகராட்சியில் மனுதாரர் கடிதம் அளித்துள்ளதும், மேற்கண்ட கட்டடத்தை மாநகராட்சிப் பொறியாளர்களால் ஆய்வு செய்தபோது மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பு உடனே இடிந்துவிடும் நிலையில் இல்லை என கண்டறியப்பட்டுள்ளதையும் எதிர்மனுதாரர்களின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

எனினும், மேற்கண்ட மனுதாரர் உரிய விவரங்களுடனும், உரிய கட்டணத்துடன் Demolition Planning permission கேட்டு விண்ணப்பம் மற்றும் மற்றொரு பகுதியில் வசிக்கும் சுப்ரியா என்கின்ற உரிமையாளரிடம் NOC பெற்று அளிக்கும்பட்சத்தில், அவரது விண்ணப்பம் மாநகராட்சியால் பரிசீலிக்கப்படும் என்பதும் பொதுவாக கட்டடத்திற்கான உறுதித்தன்மை சான்றை (Stability Certificate) பொதுப்பணித் துறையால் அளிக்கப்படும் என்பதால் பொதுப் பணித்துறையிலிருந்து Stability Certificate பெற விரைவில் கடிதம் அனுப்பி, இன்னும் 15 நாட்களில் Stability Certificate பெறப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அதே போன்று மேற்கண்ட கட்டடத்தையொட்டியுள்ள அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளரான திருமதி சுப்ரியா என்பவரிடமும் பொதுப் பணித்துறையிலிருந்து அவர்களுக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புக்கு Stability Certificate பெற்றுத் தருமாறு மாநகராட்சியால் பணிக்கப்படும் என்பதையும் மண்டலம் - 14ன் செயற்பொறியாளரது வாக்குமூலம் மற்றும் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

விரிவான விசாரணைக்குப்பின், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

மனுதாரர் சென்னை மடிப்பாக்கம் குபேரன் நகர் பிரிவு 2வது தெருவில் மனை எண். 58 மற்றும் 59-ல் அமைந்துள்ள அடுக்கு மாடிக் குடியிருப்பானது, 1996-97-ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது. அக்குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், மனுதாரரது குடியிருப்பின் மேல் பகுதியில் உள்ள குடியிருப்பிலிருந்து கழிவு நீர் கசிந்து மனுதாரரது குடியிருப்பில் வருவதாகவும், நாளடைவில் அக்குடியிருப்பு இடிந்து விழும் அபாயத்தில் உள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், மண்டலம் - 14-ன் செயற்பொறியாளரது ஆய்வில் அக்கட்டடம் இடிந்து விழும் நிலையில் இல்லை என குறிப்பிட்டிருந்தாலும் புகைப்பட ஆதாரங்களை பார்க்கும் போது, கட்டடத்தின் உறுதித்தன்மை சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது. கட்டட உறுதித்தன்மை சான்று, பொதுப்பணித் துறையால் வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

**மேலும், Chennai City Municipal Corporation Act, 1919–ன் பிரிவு 246–A-ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:**

**246-A. Demolition of buildings. -** (1) If any person intends to demolish a building either in whole or in part, he shall send an application to the commissioner in writing for permission to execute the work.

(2) The commissioner shall grant permission to execute the work subject to such conditions as he may deem necessary for ensuring the health or safety of the people living within or near the building.

(3) The demolition of a building shall not be begun unless and until the commissioner has granted permission for the execution of the work, and the work shall not be executed without complying with the conditions, if any, subject to which the permission has been granted.

மேற்சொன்ன சட்டப்பிரிவின்படி, மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய முறையில் விண்ணப்பிக்க மனுதாரரை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது. மண்டலம் - 14-ன் பொறியாளர் இம்முறைமன்றத்தில் உறுதியளித்தவாறு, மனுதாரரின் மனுவை பரிசீலித்து, மனுதாரரின் கோரிக்கையின் பேரில் உரிய சட்டவழிகளை மேற்கொண்டு, நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது.

மேலும், செயற்பொறியாளரது அறிக்கையை ஏற்று, மனுதாரர் கட்டடத்தை இடிக்க அனுமதி கோரியும், மற்ற குடியிருப்பு உரிமையாளர்களின் NOC-யையும் பெற்று அளிக்கும் பட்சத்தில், பொதுப்பணித்துறையிடமிருந்து உறுதித்தன்மை சான்றினை மாநகராட்சியே பெற்று நடவடிக்கை எடுக்கும் என செயற்பொறியாளரது உறுதியை ஏற்று அவ்வாறே செயல்பட மாநகராட்சியின் மண்டலம் - 14ன் செயற்பொறியாளருக்கு இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது. தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இம்முறைமன்றம் மண்டலம் -14ன் மண்டல அலுவலருக்கும் பரிந்துரைத்து ஆணையிடுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள இம்முறைமன்றத்தின் ஆணைகள் செயல்படுத்தியது குறித்த அறிக்கையை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்றம் மண்டலம் - 14ன் மண்டல அலுவலருக்கும் பரிந்துரைத்து ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. T.R. ஸ்ரீநிவாசன்,
108/1, பிள்ளையார் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, அசோகர் நகர்,
சென்னை – 600 083.

2) மண்டல அலுவலர்,
மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.6/64, புழுதிவாக்கம் மெயின் ரோடு,
புழுதிவாக்கம், சென்னை – 600 091.

3) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.